தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯௰௨	மலர்
	பிலவ, ஐப்பசி.	
௩௭	1961 அக்டோபர், நவம்பர்.	௭

மொழி ஆராய்ச்சியும் மொழி இயலும்

சே. வை. சண்முகம், M.A., M. Litt. Dip. in Ling.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

மொழி, மனிதனின் படைப்பு, அது அச் சமுதாயத்தின் பொது உடமை. அதனால் சமுதாய வளர்ச்சியோடு மொழியும் வளர்ச்சி அடைகிறது. இங்கு வளர்ச்சி என்பது அம்மொழி பேசும் சமுதாயம் புதிய புதிய சூழ்நிலைகளைப் பெறும்போது அச்சூழ்நிலையை விளக்கும் சொற்களைப் பெறுதலும், பழைய மறைந்துபோன சூழ்நிலைகளைக் குறிக்கும் சொற்களை இழத்தலுமே ஆகும். மக்கள் கூட்டம் கூட்டமாய், சமுதாயம் சமுதாயமாய் வாழத் துணை செய்வது மொழியே. மனிதன், இயற்கையாகக் கற்றுக்கொள்வதும் மொழியே. இதனாலே மொழி, மனிதனின் குருதியோடு கலந்ததாகச் சிலரால் எண்ணப்படுகிறது; சில சமயங்களில் அது போதைப் பொருளாக ஆகி சமுதாயத்தில் போராட்டம் ஏற்படவும் வசதி செய்கிறது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த மொழி, ஆராய்ச்சியாளர்க்கு ஒரு சிறந்த ஆராய்ச்சிப் பொருளாக அமைந்ததில் வியப்பில்லை. பல்வேறு துறையிலுள்ளோர் பல்வேறு நோக்கத்திற்காக மொழியை ஆராய்கிறார்கள்; ஆராய்ந்திருக்கிறார்கள். ஆயினும் இன்று புதிதாக மொழி இயல் (Linguistics) ஆராய்ச்சி என்று மற்றொரு ஆய்வுத்துறையும் ஏற்பட்டுள்ளது. எனவே ஏனைய ஆய்வு முறைக்கும் நோக்கத்திற்கும் மொழியியல்வாணரின் ஆய்வுமுறைக்கும் நோக்கத்திற்கும் உள்ள வேறுபாடு அறிதல் அவசியம்.

மொழி ஆசிரியர்கள் அம் மொழியின் இலக்கியம் கற்பிப்பவர்கள். இவர்கள், பெரும்பான்மையும் எழுத்து மொழியும் இலக்கிய மொழியுமே சிறப்பாக்கக் கருதுவார்கள். இவர்கள்

கருத்துப்படி மொழியைச் செம்மையாகவும் திருத்தமாகவும் பேசுவதற்கும் எழுதுவதற்கும் இலக்கணம் படிக்க வேண்டும்; அவ்விலக்கணம் இலக்கியத்தினின்றும் எள்ளிலிருந்து எண்ணெய் எடுப்பதுபோல் எடுக்கப்பட்டது. எனவே மொழி ஆசிரியர்களின் மொழி ஆராய்ச்சி, பொது மொழி (Standard language) ஆராய்ச்சியே ஆகும். அவ்வாராய்ச்சியின் நோக்கம் அம் மொழியில் எழுந்துள்ள இலக்கியத்தைப் படிப்பதற்குத் தான்.

இலக்கிய ஆசிரியர்கள், தங்களுடைய இலக்கியத்தால் அச் சமுதாயத்திற்கு மட்டுமன்றி மொழிக்கும் ஒரு புது வேகத்தை, ஆற்றலை அளிப்பவர்கள். சொற்களின் பொருள் வேறுபாடு நன்கு உணர்ந்து அவற்றைக் கையாளும் முறையில் கருத்தைச் செலுத்துவர். எப்படிச் சொன்னால் வாசகரின் மனத்தைக் கவர முடியும்; பொருளாழம் உடையதாக அமையும் என்று மொழியைப் பயன்படுத்தும் முறையில் நாட்டம் உடையவர்கள். எனவே மொழி, இவர்களுக்குத் தன் மனத்தில் உள்ளதை வெளிப்படுத்தப் பயன்படும் கருவியே. இவர்களின் ஆய்வு நோக்கம் இடத்திற்கேற்ற சொல் கண்டுபிடிப்பதுதான்.

உளநூல் அறிஞர்கள், பொதுவாக மனிதனின் நடத்தை (Behaviour) பற்றி ஆய்பவர்கள். இதை ஆராய மொழியும் ஒரு கருவியாகக் கொள்கிறார்கள். மொழி என்பது நடத்தைக்கு ஓர் ஊக்கி (Stimulus) ஆகவும் துலக்கமாகவும் (Response) பயன்படுகிறது. அதாவது நம்மை வேறு யாராவது பார்த்து 'ஒரு புத்தகத்தை எடுத்துக்கொடுங்கள்' என்று சொன்னால் உடனே நாம் அப் புத்தகத்தை எடுத்துத் தருகிறோம்; இங்கே நம்முடைய இச் செயலுக்கு அவர் சொன்ன மொழி காரணமாக இருந்ததால் அதை ஊக்கி என்பர். அவ்வாறே 'பசிக்கிறது' என்று வேறொருவரிடம் சொன்னால் அங்கே அச் சொல் நமது இயல்பூக்கத்தின் துலக்கமாக அமைகிறது. எனவே இவற்றின் அடிப்படையில் மொழியைத் துணைப்பொருளாகக் கொண்டு மனித மனத்தை ஆராய்தலே நோக்கமாகக் கொள்வர் உளநூல் ஆசிரியர்.

மனித இயல் அறிஞர்கள் (Anthropologist) மக்களின் நாகரிகத்தைப்பற்றி ஆராய்பவர்கள். அநாகரிகக் கூறுகளில் ஒன்றே மொழி. அம்மொழியினுள்ள சொற்கள் அவர்களின் நாகரிக நிலையையும் அறிந்துகொள்ளப் பயன்படும். அத்துடன் பழங்குடி மக்களின் நடை, உடை, பழக்கவழக்கங்கள் முதலியனவற்றைச் சரியாக அறிந்துகொள்ள அவர்களின் மொழியை அறிய வேண்டியிருக்கிறது. ஆகவே மனித இயல் அறிஞர்களின்

மொழியாராய்ச்சி நோக்கம் அம் மொழி பேசும் மக்களின் நாகரிகம் அறிந்துகொள்வதே ஆகும். வேறொரு காரணத்திற்காகவும் மொழியாராய்ச்சியில் அவர்கள் ஈடுபடுகிறார்கள். அதாவது மனிதன் பயன்படுத்தும் கருவிகளோ அல்லது அவனுடைய பழக்கவழக்கம் முதலியனவோ எளிதில் மாறும் தன்மையன; மொழி, அவ்வாறு எளிதில் மாறுவதில்லை. எனவே மொழியை அவ்வாய்வாளர் சிறப்பான கூறாகக் கருதுகிறார்கள். அத்துடன் மொழியாராய்ச்சியால் ஒரு நாகரிகத்தின் எல்லையையும் மற்றொரு நாகரிகத்தின் செல்வாக்கையும் அறிய முடியும்.

வரலாற்றாசிரியர்கள், ஒரு நாட்டின் பழைய வரலாற்றை அறிய, அக்காலத்தில் தோன்றிய நூல்களை பயன்படுகின்றன. இம்முறையில்தான் கல்வெட்டு, செப்பேடுகள் முதலியன வரலாற்றுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. நம் நாட்டில் கல்வெட்டுகளை வரலாற்றுக் கண்கொண்டே இதுவரை ஆராய்ந்து வந்துள்ளனர்; இப்பொழுது கல்வெட்டு மொழியைப் பற்றி மொழி இயல் அறிஞர்கள் கருத்துச் செலுத்தி வருவது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

விஞ்ஞான ஆராய்ச்சியாளரில் சிலரும் மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். அவருள் பௌதீக ஆராய்ச்சியாளர்கள் பேச்சு மொழியின் அடிப்படையான ஒலிகளைச் சிறப்பாக ஆராய்ந்துள்ளனர். அவர்கட்கு மொழியின் ஒலிகளும் அவ்வொலியின் தன்மைகளுமே முக்கியம். எனவே அவர்கள் கருத்துப்படி ஒலியின் தொகுதியே மொழி. ஆனால் அது முழு உண்மை அன்று என்பதை அனைவரும் அறிவர். ஆயினும் மொழி இயல் ஆராய்ச்சிக்கு அடிப்படையான ஒலியியல் ஆராய்ச்சி (Phonetics)க்கு பௌதீக விஞ்ஞானிகள் உதவியுள்ளனர்.

பௌதீக ஆய்வாளரில் மற்றொரு பிரிவார் கேட்பொலி இயல் (Acoustic Phonetics) என்று தனியே பேச்சொலிகளை ஆராய்கிறார்கள். அவர்கள், பேச்சொலியால் வளி மண்டலத்தில் (atmosphere) ஏற்படும் அசைவுகளை நுண் கருவி கொண்டு ஆராய்ந்து அவ்வொலியின் தன்மையைக் காணுகிறார்கள். இங்கே, ஒரு மொழி பேசும் பொதுமகன் அறியாத நுட்பம் பற்றியெல்லாம் ஆய்வதால் மொழியின் தன்மையைவிட ஒலியின் தன்மையே சிறப்பாக விளங்குகிறது.

ஒலிப்பொறி வல்லுநரும் (Sound Eugineers) மொழியின் ஒலிபற்றியே கருத்துச் செலுத்தினும் அவர் நோக்கம் ஒருவனுடைய பேச்சொலியை எப்படிப் பலரும் பல இடங்களிலும் கேட்கச் செய்வது என்பதே. தொலைபேசி, அவர்கள் சாதனைக்குச் சிறந்த சான்று.

தத்துவ ஞானிகளும் மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்துள்ளனர்; இன்றும் சிலர் ஈடுபட்டுள்ளனர். பிளேட்டோ என்ற கிரேக்கத் தத்துவ அறிஞன் சொல்லுக்கும் பொருளுக்கும் இயற்கைத் தொடர்பு இருக்கவேண்டும் என்று கூறிய கருத்தும் அவருடைய மாணக்கரான அரிஸ்டாட்டில் சொற்கள் இடுகுறியாகவே பொருளை உணர்த்துகிறது என்று கூறியதும் சொற்களை பெயர், வினை என்று முதன் முதலில் பாகுபாடு செய்ததும் பலரும் அறிந்ததே. முற்காலத்திலும் இடைக்காலத்திலும் மொழி இயல் ஆராய்ச்சி தத்துவ அடிப்படையிலே அமைந்திருந்தது என்று மொழி இயல் வரலாறு கூறுகிறது. இன்றும் சில மேலைநாட்டுத் தத்துவ அறிஞர்கள் மொழி தருக்க இயலுக்கு ஒவ்வாமையைக் கண்டு தருக்க நெறியில் செயற்கை மொழி அமைக்க முடியும் என்று காட்டியுள்ளனர்.

இவ்வாறு பல்வேறு துறையினர் மொழியாராய்ச்சியில் ஈடுபட்டாலும் இவர்கள் அனைவரும் மொழியின் ஒரு கூற்றையே ஆராய்கிறார்கள் எனலாம். ஏனெனில் மொழி என்பது என்ன? அம் மொழியை எவ்வாறு கல்லாதவனும் பேச முடிகிறது; பயன்படுத்த முடிகிறது? மொழி ஏன் காலத்திற்குக் காலமும் இடத்திற்கு இடமும் மாறுபடுகின்றது என்பன போன்ற மொழியைப் பற்றிய அடிப்படையான கேள்விகளில் அவர்கள் கருத்தைச் செலுத்தவில்லை. மேலும்சிலர், மொழியாராய்ச்சியை வேறொரு பயனைக் கருதியே செய்கிறார்கள். மற்றும் பௌதீக விஞ்ஞானி போன்றார் பேச்சு மொழிக்குத் தேவையல்லாத நுண்மையான ஒலியின் தன்மையில் ஆராய்கின்றனர். எனவேதான், இவர்களுக்கும் மேலாக, தனியே மொழி இயல் என்ற தனித்துறை—தனி ஆய்வு முறை தோன்றியுள்ளது.

மொழி இயல் அறிஞர்கள் மக்கள் எவ்வாறு ஒலிக் குறியீடுகள் மூலம் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்: பொதுமகன் எவ்வாறு ஒலி வேறுபாடு அறிந்துகொள்கிறான்; ஒவ்வொரு மொழியும் எவ்வாறு ஒலிகளையும் சொற்களையும் அமைத்துக் கொள்கின்றன என்பன போன்றவற்றில் ஆராய்ச்சி செய்து அவற்றையே தம் ஆராய்ச்சியின் பயனாகவும் முடிந்த முடிபாகவும் கொள்கிறார்கள். எனவேதான் மொழி இயல் ஆராய்ச்சி ஏனையோர் ஆயும் தன்மையிலிருந்து வேறுபட்டிருக்கிறது. மொழியியல் ஆய்வுபற்றி அடுத்தக் கட்டுரையில் விளக்குவேன்.

நாடகத் தமிழ்

தி. நா. அறிவு ஒளி

பண்டை நாடகத் தமிழ் பற்றி உண்மையான ஆராய்ச்சி இன்னும் முகிழ்க்காதது தமிழ் வளர்ச்சித் துறையில் ஒரு குறையே. திறனாய்வு நோக்கில் பண்டைத் தமிழிலக்கியங்களையும், தமிழிலக்கணங்களையும் அணுகும்போது பல புதிய உண்மைகள் வியக்கத்தக்க வகையில் கிடைக்கின்றன.

பொதுவாக மக்கள் இயற்கையைக் கூர்ந்து நோக்கி ஆராயும்போது, தன் உள்ளத் துணர்ச்சிகளைத் தானே உணர்ச்சிமிக வெளியிடுவது, எடுத்துரைப்பதுதான் இயற்கை. இது நேர் முகக் கூற்று எனப்படும்.

ஒரு நிகழ்ச்சியோ, உணர்ச்சியோ ஒருவன் உள்ளத்தில் என்ன விளைவைத் துய்ப்பை—உண்டாக்கியது என்பதை அவனே கூற முற்படுவதே நேர் முகக் கூற்று.

ஒரு செய்தியை, உணர்ச்சியை, கருத்தை, நடைமுறைச் செயலை ஒருவன் எவ்வாறு உணர்கிறான்; எப்படி மதிப்பிடுகிறான் என்பதை எடுத்துரைப்பதே நேர்முக உரையின் இயல்பாகும்.

இம்முறை வெளியீடு அடிப்படையானதும், இயல்பானது மாகும். மிகப் பழங்காலத்தில் இம் முறையே இலக்கியத்திலும் பயின்று வந்தது. தன் அடைவுகளையோ, தான் கண்ட, கேட்ட அடைவுகளையோ, உரையாகவோ, செய்யுளாகவோ வெளிப்படுத்திய முறை மிகமிகப் பழங்காலத்து முறை. இந்த முறையில் இலக்கியம் பல ஆயிரம் ஆண்டுகள் இயங்கி வந்திருக்க வேண்டும். இம் முறையைவிட அறிவுக்கு விருந்தளிக்கவும், இன்னும் எளிதாகவும், இனிமையாகவும், ஆற்றலோடும் தம் உணர்ச்சிகளையும், கருத்துக்களையும், செய்திகளையும் தெளிவாக வெளியிடவும் ஒரு ஆற்றல்மிக்க உரை, அறிஞர்களுக்கு வேண்டியிருந்தது.

அக் காலத்தில் செய்தியை விரைந்து விளக்கமாக **உணர்ச்சியாற்றலோடு** தெரிவிக்கக்கூடிய போதியவாய்ப்பு இல்லாமலிருந்தது. ஓரிடத்தில் நிகழ்ந்த செய்தியை ஓலையில் எழுதியோ, நேரில் கண்டவர்களே வாயால் எடுத்துச் சொல்லியோ தான் அதை அறியாதவர்கட்கு உணர்த்த வேண்டும். இந்த நிலையே 'நாடகக்கலை' தோற்றமளிக்க வாய்ப்பளித்தது.

மக்களின் மனத்தில் இன்பம் பொங்கும் போது, அவர்கள் துள்ளிக்குதித்து, ஓடி ஆடித் தம் இன்பத்தைத் தாமே சுவைத்

தனர். தாமே சுவைத்ததைப் பிறரும் சுவைக்கச் செய்தனர்.— இந்தவகையில் ஆடற்கலை தோன்றியது.

ஆடற்கலையின் தோற்றம், தன்னுள்ளத்துணர்ச்சியை— வெறியை—உடலின் அசைவால்—இயக்கத்தால்—வெளியிட்டுத், 'தன்னுறுதல்' பெறுவதற்கே அமைந்தது. அந்த ஆடலைக் கண்டவர்கள், தாமும் உணர்ச்சி மிக்கவராகி, ஆடுபவர் உணர்த்திய உணர்ச்சிகளைத், தம் உய்த்துணரும் அறிவால் புரிந்து கொண்டு ஒருவகைச் **சுவையின்பம்**' அடைந்தனர்.

இந்த ஆடற்கலையையும், கூத்துக்கலையையும், போர்க்கள நிகழ்ச்சிகளையும், புறப்பொருள் நிகழ்ச்சிகளையும், வீட்டினருக்கும், தம் உறவினர்க்கும், முதியோர்-குழந்தையர்கட்கும் உணர்த்தவே முதலில் கையாண்டனர்.

நாளடைவில் இவை அறிஞர்களின் கருத்தைக் கவர்ந்தன. அறிஞர்களின் தொண்டால் ஆடற்கலையாகவும், நாடகக்கலையாகவும் உருவம் எய்தின.

இந்தக் காலத்தில் தான் நேர் முகக்கூற்றுக்களாக அமைந்த பாட்டுக்கள் செல்வாக்குடன் இயங்கின. ஒரு பாணன் (பாடகன்) உணர்ச்சிமிக்க நிகழ்ச்சியைப் புலனுணர்வைக் கிளறி வளர்க்கும் திறம் அமைந்த இசையோடு மக்கள் முன்னிலையில் பாடி அவர்களை இன்புறுத்தலானன். உணர்ச்சிக் கடிமையாகி இசைப்புலவன் பாடும்போது; அவனையறியால் அவன் முகம், உடல், கைகள் தொழிற்பட்டன. பாட்டின் பொருளுக்கேற்ற மெய்ப்பாடு அவனுடலில் 'குறிப்பு வழி' (நடிப்பு, அல்லது அவிநயம்) வெளிப்பட்டது. இந்த நிலையின் வளர்ச்சியாகவே, அவிநயம், ஒட்டந்துள்ளல், சாக்கியக்கூத்து ஆயவை பிறந்தன. இதன் வளர்ச்சிநிலையே இன்று மலையாளத்தில் (மலை ஞாலத்தில்) பயின்றுவரும் 'கதகளி' நாட்டிய நாடகமாகும்.

நாடகக்கலையில் இசைப்பாட்டுக்கு அளவுகடந்த செல்வாக்கிருந்ததற்கும் (இருந்து வருவதற்கும்) அடிப்படைக் காரணமே இதுதான். இசைக்கலையின் தூண்டுதலே நடிப்புக்கலைக்குத் துணையாக இருந்தது. உள்ளுருகிப்பாடும் போது உணர்ச்சி வெளிப்படுவது இயற்கை. இந்த மெய்ப்பாட்டின் வெளியீடே நடிப்பாக, நாடகமாக உருவானது. புறப்பொருள் இலக்கணத்தில் போர்க்களத்திலே ஆடப்படும் கூத்துக்கள் பல உண்டு. ஒளிவாள் அமலை, முன்தேர்க்குரவை. பின்தேர்க்குரவை முதலியன பலர் சேர்ந்து ஆடும் கூத்தாட்டம். இக் கூத்தாட்டின் போது போர் மறவர்கள் ஆண்மைவெறி பொங்கும் உரைகளை—வாழ்த்துக்களை—பாட்டுக்களைக் கூச்சலிட்டு ஆர்த்துப் பாடுவது வழக்கம். இதனையே 'ஆரப்பாட்

டம்' (ஆர்ப்பு + ஆட்டம்) எனத்தமிழ் குறிக்கும். இச்சொல் பண்டைக்காலும் தொண்டு இன்றுவரை பேச்சுவழக்கில் வாழ்வது கருதத்தக்கது. இன்று அச்சொல்லின் பைழய பொருள் ஓரளவு மாறி அது சார்ந்த ஒரு பொருள் குறித்து வழங்குகிறது.

இவ்வாறு நாடகக்கலையின் துவக்ககாலத் தோற்றம் அமைந்திருந்தது. நடைமுறை வாழ்க்கையில் அமைந்த கூத்தாட்டம் புலவர் உலகைக் கவர்ந்தது. பெரும்பான்மையான மக்களின் உணர்ச்சிகளை விரைவில் தொட்டுத், தூண்டும் ஆற்றல் கூத்துக் கலைக்கிருப்பதை உணர்ந்தனர். எழுச்சியூட்டும் ஆர்வக்கலையான நாடகக்கலையை 'அறிவு வழிப்பட்ட, முறையான கலையாக' மாற்ற முனைந்தனர். இக் காலத்தில் பொதுமக்களின் கலையான நாடகம். அறிஞர்களின் கலையாகவும் மாற முற்பட்டது. கதை தழுவி நாடகம் அமைக்கும் முறை அறிஞர்களாலும் உணரப்படாத முன்னைக்கும் முன்னைக் கால நிலை இது.

இப்போது தான் நேர்முகக் கூற்றுப்பாட்டை அப்படியே அவிநயத்தோடு பாடியாடும் நிலை தோன்றியது. அந்தக்கால நிலையே இன்றைய 'பரதநாட்டியம்' ஆகும். தனி ஒருத்தி தன்னுணர்ச்சியை, உள்ளக் கருத்தை, ஒரு நிகழ்ச்சியை மெய்ப்பாட்டு நலம் கனிந்து விளங்க வெளியிடப்படும் ஆடல் அவிநயம்.

நாடகக்கலையின் முதல் நிலை இது வாகும்.

நாடகக்கதைமுறை யமைப்பும், 'நாடக உரை' அமைப்பும், இந்த நேர்முகக்கூற்றுக்குப் பல காலத்துப் பின்னர்த் தோன்றியமுறையாகும். கவிஞனோ, நாடகாசிரியனோ தன் அடைவையோ, தன் உணர்ச்சியையோ தானே கூறாமல் வேறொரு உறுப்பினர் வழி வெளியிட முயன்ற கற்பனை 'இலக்கிய உலகில்' மிகவியக்கத்தக்க புது முயற்சி. இம் முயற்சியை முதலில் எண்ணிக், கற்பனைசெய்த புலவன் நம் பாராட்டுக்குரியவன். அவனுடைய அந்த முதல் கற்பனை—முதல் முயற்சி—இன்று எவ்வளவு விரிவாகப் பரவலாக—ஆழமிக மக்கள் மன்றத்தில் வேர் கொண்டு விட்டது! அழிக்க முடியாத அரும் பெருங்கலையாக, ஆற்றல் மிக்க வல்லமை வாய்ந்து நுண் ஒண் கலையாக நாடகம் நிலை பெற்றுவிட்டதோடு; அதன் வளர்ச்சியாகத் திரைப்படம், தொலைக்காட்சி ஆகியவைகளும் வளர்ந்து விட்டனவே!

இன்று நமக்குக் கிட்டியிருக்கும் சங்க இலக்கியங்களில் புறப்பொருள் குறித்த நூல்களைத்தவிர, ஏனைய அகப்பொருள்கள் யாவும் **நாடகமுறைக் கூற்றுக்க**ளாகவே இருப்பதைக்

கருத வேண்டும். அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை, ஐந்திணை நூல்கள் ஆகியவை அனைத்தும் நாடக உறுப்பினரின் கூற்றுக்களாக அமைந்துள்ளன.

இதனால் நாம் அறிய வேண்டிய நுட்பமான உண்மை ஒன்று உண்டு. நாடகமுறை அமைப்புக்கும் முந்தியது 'நேர் முகக்கூற்று எனக் கூறினேன். நம் சங்ககால இலக்கியம் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுக்குமுன் தொடங்கி அமைவதாகும். அதற்கும் முற்பட்ட காலத்தியது நேர்முகக் கூற்றுச் செய்யுட்கள்' என்பதைத் தெளியவேண்டும். நேர் முகக் கூற்றுப் பாக்கள், உரைகள் எத்தனை நூற்றாண்டுகளாக வளம் பெற்றுச் சிறந்தனவோ!

புறநானூற்றிலும், பரிபாடலிலும் நாடகமுறை யமைப்புடையவை சில இருக்கின்றன என்பதையும் நாம் நினைவில் பதிக்க வேண்டும்.

பட்டுப் பாட்டும், பதிற்றுப் பத்தும் பெரும்பான்மை நேர்முகக் கூற்றுப்பாக்களாக உள்ளன.

பரிபாடல், கலித்தொகை இரண்டும் ஒருவிறலி, ஓரிரு விறலியர்—பொருநர் மட்டும் ஆடி நடித்தற்குரிய நாடகப் பாட்டுக்களேயாகும்.

பரிபாடலில் சில பாக்கள் பொது இசைமன்றுகளில் நீண்டநேரம் பாடுதற்கு என்றே இயற்றப் பெற்றவையாகும். பல இசைக்கருவிகள் முழங்க, ஒரு பாணனோ, பாடினியோ, பாடுவதும் உண்டு. பல இசைப்புலவர் ஒருங்கு அமர்ந்து (குழுப்பாட்டு) பாடுவதும் உண்டு. இத்தகு பாடல் அரங்குகள் கடற்கரைகளில், மலைகளில், பூம் பொழில்களில் ஆற்றங்கரைகளிலும், அரசவைகளிலும், விழா நடக்குமிடங்களிலும் நடைபெறும். ஊரின் பொதுவிடமான (பொதியில் அல்லது மன்றம்) ஒரு பெரிய மரத்தடியில் இசையவை நிகழும். ஊரினர்யாவரும் ஆங்கு கூட, இரவில், காலையில், மாலையில் நெடும் பொழுது இசை விருந்தும், கூத்தாட்டவையும் நிகழும்.

தமிழ்நாட்டில் கூத்துக்கலை மன்பதைக்கலையாகவே வளர்ந்து வந்தது. விறலியர், பொருநர் மட்டுமின்றி, அரசர்கள், மறவர்கள், ஏனைய மக்களும் கூத்தாடி மகிழ்ந்தனர். நாடகம் ஆடுவது ஒரு விளையாட்டுக் கலைபோலவளர்ந்து. குடும்பக் கலையாகச் செழித்திருந்தது. 'நாட்டுப் பொதுவுரிமைக்கலை'யாக நாடகக்கலையும், இசைக்கலையும் இலங்கின.

நாடகமும் இசையும் கூடிய கூட்டுக்கலையே பிற்கால **கதை தழுவியநாடகம்** அமையக் காரணமாக இருந்தது.

தனிப்பட்டவர்களே முதலில் தம் உள்ளத்தெழுச்சியைப் புறத்தில் புலப்படுத்தக் கூத்தாடினர். பின், தனியார் நிலையிலிருந்து இருவர்--மூவர்—ஐவர் ஆடும் ஆட்டம் அமைந்தது. பின்பே பலர் கூடி ஒருங்காடும் நிலை வளர்ந்தது. ஆடவரும் பெண்டிரும் சேர்ந்துஆடும் வளர்ச்சி நிலை மிக இன்றியமையாத –குறிப்பிடத்தக்க கலைச்சிறப்புடையதாகும். மறவரோடு கூடி வாள் சுழற்றி ஆடும் கூத்துக்களும், வேல் சுழற்றி ஆடும் கூத்தும், வெற்றிக் கூத்தும், குரவைக் கூத்தும், வெறியாட்டமும் நாடகக்கலையின் மிகவும் முற்போக்காக வளர்ந்த நிலையைக் குறிக்கும். தனிப்பட்டோர் கூத்துமுறை மிகப்பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டே தோன்றி வளர்த்திருக்க முடியும்.

அவிநயக்கூத்தை 'ஒற்றை நடிகர் கவிதை நாடகம்' என்றே கூறவேண்டும். இக் கூத்தில் கதையைவிட, உணர்ச்சிக்கும் மெய்ப்பாட்டு வளத்துக்கும், இலக்கிய நயத்துக்கும், அழகுணர்ச்சிக்கும் கற்பனை இன்பத்துக்குமே முதலிடம் உண்டு. இது பல காலம் வரை மக்களால் போற்றப்பட்டு வந்தற்குக் காரணம், சுவைஞரின் பேரறிவுடைமையும், நிறைந்தகற்பனை யுணர்ச்சியுமே யாகும்.

நுண்ணிய கலைநயத்தைப் பேரறிஞர்களும், நல்ல கல்வியாளருமே போற்றிச் சுவைத்துணரமுடியும். பண்டைத் தமிழர் எத்தகைய கலையுணர்ச்சியும், கற்பனைவளமும் நிறைந்தோராய் இருந்திருந்தனர் என்பதை இதனல் நன்கு உணர முடிகிறது.

இத்தகு 'உணர்ச்சி நாடகம்' தமிழகத்திற்கே உரிய சிறப்புக்கலையாகும். உலகில் இந்தவகை நாடக அமைப்பு வேறெந்த நாட்டிலும் இல்லாத முறையாகும்.

குறிப்பிட்ட கதைத் தலைவன் தலைவியர் இல்லாத நாடக அமைப்பு **இலக்கியப் புலமை** மிக்கவர்களால் மட்டுமே நன்குணர்ந்தின்புறக்கூடிய இயல்பினது. இக்கலைப் பண்பு உலகப் பொதுமை நாடகப் பண்பாம். இது தமிழ் மொழிக்கே உரிய தனிப்பண்பு-மரபு-அதேநேரத்தில், உலகக்கலைமரபு கனிந்திட அமைந்த மரபுவித்து மாகும். தமிழ் நாடக இலக்கியம் உலக நாடக இலக்கியமாக விளங்கிய மாண்பைத் தமிழரும், தமிழ் நாட்டினரும், தென்னுட்டினருமே இன்னும் உணர்ந்து போற்ருதது வியப்பளிக்கிறது.

இவ்வுண்மையை இனிமேல்தான் உலகிற்கும் உணர்த்த வேண்டும். மேலைநாட்டு 'பால் நடனம்' நம் நாட்டுக் குரவைக் கூத்தின் சிதைவுவளர்ச்சியே என்பதை யாரே அறிவர் ?

பொது விழாக்களும், தனிவிழாக்களுக்கும்; மன்பதை விழாக்களுக்கும், அரசியல் விழாக்களுக்கும் நாடகம் நடனம் அமைத்து அதைச்சிறப்பும், உயர்வும் இன்பமும் உள்ளதாக ஆக்கும் '**நாகரிகப் பண்பாடு**' தமிழகக் கலைவாழ்க்கைப் பண்பாடு ஆகும். வியக்கத்தக்க **உலக உணர்வு மாண்பு** இதில் புதைந்துள்ளது. தனி மனிதனுக்கு உலகிலுள்ள உரிமையும், உலகம் தனியாருக்கு ஆற்றும் கடமையும், இரு சார்பின் இயைபு இருபக்கமும் இக்கலை நிகழ்வமைப்பால் இணைக்கப்பட்டு பொதுமை அறம் புறக்கப்படுவதை நோக்க வேண்டும்.

ஒரு நாட்டின் கலைகளின் அமைதியையும், பண்பையும் கொண்டே அந்நாட்டு வரலாற்றையும், மக்கள் வாழ்க்கை முறையையும், மன்பதை அமைப்பையும் கணித்து விடலாம். தமிழக மன்பதை யியக்கம், நாட்டியல் மரபு—(National heridity) ஆகியவை எவ்வளவு பண்பட்டவை, எவ்வளவு அறிவு நலன் வாய்ந்தவை, எத்துணை நாகரிகச் செம்மை கனிந்தவை என்பதை இதனால் தெளியலாம்.

வாழ்க்கையின் சிறப்பான நிகழ்ச்சிகளே கலைகளின் நிறை உருவமாக உருவாகி யிருக்கிறது தமிழ் நாடு என்பதை உலகம் நன்குணர வேண்டும்.

கலைஞர்களுக்கு மட்டுமன்றி, சுவைஞர்கட்கும் கற்பனை யாற்றல் இருக்க வேண்டும் என்பது தமிழகக் கலை இலக்கியக் கொள்கையாகும். கலைஞன் கூறியதைவிடக் கூறாமல் கூறிய கருத்துக்களை, உணர்ச்சிகளை இலக்கிய—கலைச் சுவைஞன் தன் பகுத்தறிவின் வல்லமையால் உய்த்தறிந்து தெளிய வேண்டும்.

கதை, கவிதை, நாடகம், முதலிய எக்கலையாயினும் அதன் முன்—பின் தொடர்புகளையும், சூழ் நிலைகளையும்; அக்கலை யரங்கத்தின் '**நிழல்**களையும்' '**எதிரொலி**களையும்' 'எதிர் வினைகள்—விளைவுகளையும்' தன் நுண் மாண் நுழைபுல மேதையால் சுவைஞனே கற்பித்து உய்த்தறிந்து சுவைக்க வேண்டும்.

தொகை நூல்களின் பாடல்களுக்கு—முன், பின் நிகழ்ச் சித் தொடர்பு உண்டு. சான்றாக ஒரு காதலி தன் தோழிக்கு 'பிரிவு ஏக்கத்தை' விளக்குவதாக ஒருபாட்டு இருக்கும். இது ஒரே ஒரு நிகழ்ச்சியாலான ஒரு காட்சி மட்டுமே. இதற்குமுன் பல நிகழ்ச்சிகள்—காட்சிகள் நிகழ்ந்திருக்கின்றன. இக்குறிப் பிட்ட காட்சிக்குப் பின்பும் பல நிகழ்ச்சிகள்—காட்சிகள் நிகழப் போகின்றன. இந்த இரு நிகழ்ச்சிகளையும் சுவைஞர்

தாமே தம் கற்பனைத்திறனால் உய்த்துணர்ந்து சுவைக்க வேண்டும். இதனால் சுவைஞனின் எண்ணும் ஆற்றலும் (Thinking Power) கற்பனையாற்றலும் (Imaginatian Power) நுண்ணாய்வு ஆற்றலும், திறனாய்வுத் தன்மையும், ஆராய்ச்சி இயல்பும், வாழ்க்கை அடைவைப் பற்றிய ஆர்வமும், வளரக் கூடிய வாய்ப்பு உண்டாகிறது, இதுவே இவ்வருந்தமிழ் இலக்கியம்—கலைகளைப் பயில்வதாலும், சுவைப்பதாலும் சுவைஞர்க்கு ஏற்படும் பயன்களாகும்.

நுண்ணிய அறிஞர்க்கே தமிழ்கலைகளும், தமிழிலக்கியங் களும் தம் ஒப்பற்ற இன்பத்தையம், ஆக்கத்தையும், புதை பொருட் செல்வங்களையும், நுண்மாண் ஒண்மைகளையும், நுண்ணிய எழிற் சுவைகளையும் ஈயும். பிறர் அவ்வொட்ப நுட் பம் உணர வியலாது வாளா நொந்து வெறுப்படைவர்.

இவ்வொரு நுட்பம் கொண்டே பண்டைத் தமிழ்ப் புலவர் —கலைஞர்களின் ஆராய்ச்சியறிவும், கற்பனையாற்றலும், எண்ணுந்திறனின் ஆழமும், உலகியல் உணர்வும், முருகுணர் வும் எவ்வளவு சீரியது, நுட்பமானது விழுமியது என்பதை உணரலாம்.

புலவர்கள் தாமே புகுந்து பாட்டில் பேசாமல், கதை யுறுப்பினர் வாயிலாகப் புகுந்து (கூற்று) பேசி, உணர்வையும் கருத்தையும் வெளியிடும் நுண்திறமே தமிழின் மிகப் பழங் கால இலக்கிய வாழ்வை—மரபு வரலாற்றைக் காட்டுகிறது.

'ஆசிரியர் பேசும் முறையே முதலிற் பயின்று, பின்பே கதைமாந்தர் கூற்று முறை அமைந்தது' என்ற நுண்ணிய உண்மை தமிழ்க்கலை—இலக்கியத்துறை ஆராய்ச்சியில் புதிய தோர் ஒளி தரும் கருத்தாகும்.

இங்கு 'ஆசிரியர் கூற்று முறை அமைந்த அகப்பொருள் நூல்கள் பாட்டுக்கள் இன்று எங்கே?' எனக் கேட்கும் போது; அவை இருந்து அழிந்துபட்டன என்றே கூற வேண்டிய நிலையிலிருக்கிறோம். ஆனால், அவை இருந்தன என்பதற்குரிய அரியசான்று கோவை நூல்களில் அமைந்த' கவிக் கூற்று, ஆகும். அதுமட்டுமின்றி பழந்தமிழ்க் கூத்தின் இறுதிப்படியாக விளங்கிய தெருக்கூத்துக்களிலும், குறவஞ்சி நாடகங்களிலும் வரும் 'கட்டியக்காரன்' கூற்றானது கவிக் கூற்றேயாகும். கவிஞனே கதையை இயக்குபவன். அக்கவிஞன் குரலாகக் கட்டியக்காரன் கூத்தில் இடம் பெற்றான்.

தமிழர் எழுதிய எல்லா நூல்களும் அழியாமல் இன்று கிட்டியிருந்தால் வரலாற்றாய்ச்சியிலும், கலை ஆராய்ச்சியிலும்,

இலக்கிய ஆராய்ச்சியிலும் பல உண்மைகளைத் தெளிவாக உணர்ந்திருக்கலாம். அதோடு உலகத்துக்கும் பல உண்மைகளை உணர்த்தி வழிகாட்டி இருக்கலாம். என்செய்வது!

சங்ககால இலக்கியங்கள் **எல்லாமே கூட** நமக்குக் கிட்டவில்லையே! சங்ககாலத்திய படைப்புக்களில் **விரல் விட்டு எண்ணத்தக்கவை மட்டுமே** நமக்குக் கிட்டின. பிற? அவ்வாறிருக்கையில், நம்முடைய ஆராய்ச்சிகளில் மறுப்புக்குரியவைகளைக் கூறுவோர் துணிந்து எதையும் கூற முடியாதே!

பண்டைக்கால நாடக உரையாடல் எவ்வாறிருக்கும் என்பதற்கு எதிர் பாராதவகையில் ஒரு சான்று புறநானூற்றில் கிட்டுகிறது. அதிகமான் நெடுமான் அஞ்சி போர்களத்தில் மார்பில் வேல் ஊடுருவிப் பாய இறந்துபட்டான். அதைக் கண்ட செந் தமிழ்ப் புலமைச்செல்வி அவ்வையார் உள்ளம் புண்பட்டு நொந்தழுது அரற்றிய மொழிகள் எவ்வாறோ பாட்டாக நம் புறநானூற்றில் அமைந்துவிட்டது. இது தமிழரின் நற்றவமே போலும்! அப்பாட்டினை 'இணைக்குறள் ஆசிரியப்பா' என யாப்பின் வழிப்படுத்தக் கூடும். ஆயின் பாட்டமைதியினூடே அக்காலப்பேச்சு வழக்கியல்பே மிகுந்திருப்பதை நுண்ணிய ஆய்வு நோக்கோடு கற்போர் அறிய முடியும்:

" சிறியகள் பெறினே எமக்கு ஈயும் மன்னே!
பெரியகள் பெறினே யாம் பாடத் தான் மகிழ்ந்து உண்ணும் [மன்னே!
சிறு சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே!
பெருஞ் சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே!
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கு ஈயுமன்னே!
அம்பொடு வேல்நுழை வழியெல்லாந் தான் நிற்கும் மன்னே!
நரந்த நாறும் தன் கையால்
புலவு நாறும் என்தலை தைவரு மன்னே!
அருந்தலை இரும்பாணர் அகல் மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல் நுண் தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்று வீழ்ந்தன்று அவன்
அருநிறத்து இயங்கிய வேலே
ஆசாகு எந்தை யாண்டு உளன் கொல்லோ!
இனிப், பாடுநரும் இல்லைப் பாடுநர்க்கு ஒன்று ஈகுநரும் [இல்லைப்

பனித்துறைப் பகன்றை நறைக் கொண் மா மலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க்கு ஒன்று
ஈயாது வீயும் உயிர் தவப் பலவே." [புறநானூறு : 235.]

இப்பாட்டை நன்கு ஆராயும் போது அக்காலப் பேச்சு வழக்கின் உருவம் நமக்கு நன்கு புலனாகும். உணர்ச்சிக் கொந்தளிப்பு அவ்வையாரின் உரையில் பொங்கிப் பொதுளுவதை நன்கு அறியலாம். இத்தகு **உரைவளம்** மிக்க நாடகங்கள் பண்டைக்காலத்தில் மிகுதியாக நாடெங்கும் நடைபெற்றிருந்தன.

நாடக வழக்கு மிகுதியாக இருந்தமையால் தானே தொல்காப்பியர், "செய்யுள் வழக்கைக் குறிக்க வந்தபோது உலகியல் வழக்கையும், நாடக வழக்கையும் 'ஒப்பமதித்து ஆராய்ந்து பாடல் சான்ற புலநெறிவழக்கத்தை ஆராய்ந்து தம் அரும்பெரும் இலக்கணத்தில்' அமைத்தார்! இலக்கணப் பேராசிரியர்களும் மதிக்கும் நாடக வழக்கு தமிழகத்தின்' வாழ்க்கைக் கலை' யாக வழ்ங்கிச் சிறந்த மாண்பு வியக்கத் தக்கதே.

கலித்தொகையும், பரிபாடலும் எவ்வளவு நாடகப் பண்பமைந்தவை என்பதை ஆராயும்போது நம் கற்பனையாலும் எட்ட முடியாத வியப்பும் விரிந்த இலக்கிய நோக்கும் முகிழ்க்கிறது. சங்க இலக்கியங்களை நாம் குறுகிய எல்லையிலிருந்து ஆராய்வதை விட்டு விட்டு, விரிந்த ஆராய்ச்சி நோக்கில் அணுகாததால் பல உண்மைகளைக் காணவும் உணர்த்தவும் தவறி விட்டோம்.

தொகை நூற்களைக் கூட நாம் **தமிழ் மரபுக்கிசைந்த கண்ணோட்டத்தில்** ஆராயாமல் இருக்கும் குறைபாட்டை மாற்றிக் கொள்ளவேண்டும். கலித்தொகையும், பரிபாடலும், ஐந்திணை நூல்களும், கோவை நூல்களும் **கவிதை நாடக இலக்கியங்களே** என்ற உண்மையை நான் அராய்ந்தறிந்த போது வியப்பின் எல்லையை எய்தினேன். அந்நூல்களை நாடக அமைப்பு முறையில் வகுத்தமைத்து ஒரு நூல் இயற்றினால் அப்போது அவற்றின் உண்மையை உலகம் உணரும். இதேபோலக் காமத்துப் பாலும் ஓர் ஒப்பற்ற நாடகத் தமிழ் இலக்கியமேயாம். இவற்றை அரங்கில் நடிக்கவும் முடியும் என்பதைத் தமிழகம் நனி யறியவேண்டும்.

இவ்வுண்மைகளை உணர்ந்து சங்க இலக்கியங்களின் உண்மை நாடகத் தமிழிலக்கியத்தை ஆராய வேண்டுவது ஆய்வறிஞர்கள் கடமையாகும்.

பாட்டின் திறன்

வித்வான். சொ. சிங்காரவேலன், பி.ஏ.,

பாட்டின் சிறப்பு :

மனிதன் படைத்த படைப்புக்கள் பலவற்றுள் பாட்டுத் தனிச்சிறப்புடன் விளங்குகின்றது; பாட்டு உள்ளத்து உணர்ச்சிகளை உரைக்கும் ஓவியமாய், ஒளிர்கின்றது. உலகின் அழகு வெள்ளம் கவிஞன் நெஞ்சிற் பெருக்கெடுத்துப் பாய் கின்றது. அப்பேராவியற்கைப் பேரழகு கவிஞனின் உயிரோடு இசைத்து ஒலிநயம் உடையதாய்—பாட்டாய் முகிழ்க் கின்றது. உலகு என்னுடன் ஓவியமாய் உரையாடுகின்றது. என் உயிர் அதற்குப் பண்கலந்து விடை பகர்கின்றது' என்று கவிஞர் தாகூர் கூறுவதன் கருத்து இதுவே யாதல் அறிந்தின் புறத்தக்கது. (The world speaks to me in Pictures, my soul answers in music) இத்தகு பாட்டின் பெற்றியினை உள்ளபடி உணர்ந்தவர்க்கு உலக நிலைகளில் உள்ளம் செல்லுவதில்லை.

பாட்டு-இலக்கணம் :

பாட்டு என்பது யாது? இதற்கு விடை கூறுவது அத்துணை எளிதன்று. பாட்டு என்பது என்ன வென்று உயிர்க்கு— உள்ளத்திற்குப் புரிகின்றது; ஆயின்' இதுதான் பாட்டு என்று வரையறைப்படுத்துவது அரிதாகின்றது. அகச்ஃடைன் என்ற அறிஞர் 'விளக்கம் கேட்கப்படா விட்டால் நான் நன்கு அறிவேன் என்பேன்; விளக்கம் கேட்கப் பட்டால் நான் கூற அறியேன் ஆவேன் என்று வேறு தொடர்பாகக் கூறியுள்ளது, இங்கும் பொருந்தும் எனலாம். *

ஆங்கிலப் பேராசானாக விளங்கிய ஜான்சன், பாட்டு என்பது யாப்புக் கட்டுப் பாடுடையதாய், 'கற்பனை நலம் கெழுமிய தாய், இன்பமூட்டும் நிலைகளின் கூட்டு வடிவமாய் விளங்கும் கலை என்று கூறுவர். அதன் பிழிவு 'புதிய படைப்பு' (invention) என்பது அவர் கருத்தாகும். 1 'எண்ணமும் சொற்களும் உணர்ச்சிப் பெருக்கும் ஆகிய வற்றைத்தவிர வேறு பாட்டு எங்குள்ளது' என்பர் 'மில்' என்ற பேரறிஞர். 2

---

*An Indroduction to the Study of Literature. P. 63

1. "Poetry", Says Johnson, is, "Metrical Composition;" it is the art of uniting Pleasure with truth by calling imagination to the help of reason"; and its "essence" is invention."

2. "What is Poetry" asks Mill. "but the thought and words which emotion spontaneosly embodies itself."

"ஒரு சிறந்த ஓவியன் வண்ணங்களைக் கொண்டு எழில் மிக்க ஓவியம் தீட்டுகின்றான்; அதைப்போன்றே கவிஞன் கவிதை தீட்டுகின்றான்; கற்பனைக் காட்சியைத் தக்க சொற்களால் எடுத்து விளக்கும் அருங்கலையே பாட்டு என நாம் உணர்கின்றோம்' என்று கூறுவர் மெக்காலே என்ற பேராசிரியர். 1

பண்ணார்ந்த எண்ணத்தின் பிழம்பே பாட்டு என்பது கார்லைல் கருத்து. 2 கற்பனையின் வெளியீடே பாட்டு என்று பொதுப்படையாகக் கூறலாம் என்பர் பெருங்கவிஞர் செல்லி. 3

ஹாச்ஃலிட் என்ற அறிஞர், கற்பனைகள், உணர்ச்சிகளின் கலப்பு மொழியே பாட்டு என்பார். 4 கோல்ட்ரிஜ் என்பார், அறிவியலொடு மாறுபட்டது கவிதைக் கலை என்றும், கவிதை இன்பம் ஊட்டுதலை நோக்கமாக உடையதென்றும் முழு உண்மையை நோக்கமாக உடையதன்று என்றும் கூறியிருக்கிறார். 5 'மனித உள்ளத்தின் உறுதியான கலை வெளியீடாக உணர்ச்சியும் ஒலிநயமும் உள்ள மொழியில் அமைவதே பாட்டு, என்றெழுதுகின்றார் வாட்ச்ஃ தண்டன் என்ற நல்லறிஞர். 6. இவ்வாறு பலரும் பாட்டு இன்னது என்று தத்தம் உள்ளத்தின் முடிவுகளை மேலை நாடுகளில் புலப்படுத்தியிருக்கிறார்கள். மாத்யூ ஆர்னல்ட் என்ற பெரும்புலவர் வியக்கத்தக்கதும், தெளிவமைந்ததும், மனிதனின் வார்த்தைகளால் வடிக்கக் கூடியதும் ஆகிய ஒப்பற்ற படைப்புத் தான் பாட்டு, என்று கூறியுள்ளமையை 7 நோக்கும் போது இக் கலையின் சிறப்பு நமக்கு நன்கு விளங்கக் கூடியதாகும்.

---

1. "By Poetry" says Macauly, "we mean the art of employing words in snch a manner as to produce an illusion on the imagination the art of doing by means of words what the Painter does by means of colours"
2. "Poetry" declares carlyle, "We will call musical thought" —An Introduction to the study of Literature—.64.
3. "Poetry" says Shelley, "in a general sense may be defined as the expression of the imagination."
4. "Poetry" Says Hazlitt, "the language of the imaginations and Passions."
5. In Coleridge's view, Poetry is antithesis of science, having for its immediate object pleasure, not truth.
6. "The concrete and artistic expression of the human mind in emotional and rhythmical language."
7. "It is simply the most delightful and perfect form of utterance that human words can reach."
—An Introduction to the Study of Literature P. 64-65.

பாட்டின் திறன் :

இத்தகைய பாட்டு இலக்கியங்களில் கவர்ச்சி நிறைந்து உலகெங்கும் விளங்கக் காண்கின்றோம். பாட்டின் இன்றியமையாத திறமை வெளியிடும் திறமே ஆகும். மனித வாழ்வினின்றும் நாம் பார்க்கத் தவறிவிடும் பேரழகுகளையும், ஆன்மீக மாட்சிகளையும் நமக்குக் காட்டுகிறது பாட்டு. அது மட்டுமோ? மூடியிருக்கும் நம் கண்களைத் திறக்கிறது; நம் கண்களுக்கு அவ்வெழிலைப் படரவிட்டு இன்பம் ஊட்டுகிறது. நம்மிற் சிலருக்கே பாட்டின் உட்காட்சியினையும் உணர்ச்சியினையும் கண்டு துய்க்கக் கூடிய உள்ளப் பாங்கு இருக்கிறது.[1] பாட்டு எல்லோராலும் எழுதப் பெற்றுவிடும் எளிமை உடையதன்று. பாவலன் ஒருசிறந்த மெய்ப்பொருள் ஆய்வாளனாக இருத்தல் வேண்டும் என்பர் அறிஞர் கோல்ட்ரிட்ஜ்.[2] பாட்டுக்களைத் தன்னுணர்ச்சிப் பாட்டுக்கள் (Subjective Poetry) என்றும், படைப்புப் பாட்டுக்கள் (Creative Poetry) என்றும் இருபெரும் பிரிவுகளில் அடக்குவர் அறிஞர்.

உலகிற்கு உரியது :

இவ்வாறு எழுதும் பாட்டுக்கள்—பொது நிலையில் விளங்கும் பாட்டுக்கள் அவ்வந்நாட்டிற்கு மட்டும் உரியவை அல்ல; உலகிற்கே உரியவை, உலகமாந்தர் வாழ்வுக்கென அவை எழுந்தனவே யன்றிக் குறிப்பிட்ட சிற்றெல்லைக் குட்பட்டன அல்ல அவை.

திருக்குறளும், கம்பராமாயணமும் போன்ற அரிய உலகப் பேரிலக்கியங்களை அடைந்துள்ளமையாலேயே இன்று தமிழ் நாடு உலகவரால் அறிந்து அன்புறவு பெற்றுப் பொலிகின்றது. ஆங்கில மொழியை அனைவரும் விழைவது சேக்ஸ்பியரும், மில்டனும், டென்னிசனும் போன்ற சான்றோர் எழுதிய நற்பனுவல்களால் அல்லவா? 'ஒரு நாட்டினைப் பிறிதொரு நாடு விரும்புவது, அரசியல் நெறியாளர்களால் மட்டும் அல்ல; அவர்களினும் பெருமை வாய்ந்த நல்லாசிரியர்களாலேயே ஆகும்' என்று டென்னிசன் கூறியுள்ள பகுதி இங்கே நினைத்து இன்புறத் தக்கது.

அற்புதப் படைப்பு :

அண்மையில் வாழ்ந்த பெருங்கவிஞர் பாரதியாரகும், "பாட்டுத் திறத்தாலே இவ்வையம் முழுதையும் பாலித்திட வேண்டும்" என்றே கருதினர் அவர் அதுமட்டுமோ?

---

1. An Introduction to the Study of Literature. —P.90
2. "No man was ever yet a great poet without being at the same time a profound philosopher (Biographia Literaria—chapter XV)

"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல்" 1

என்றும் உறுதிகொண்டு வாழ்ந்தார். கவிதையே தொழிலாக் கொண்டு பாட்டுப்பல பாடியே வாழ்நாளை நன்னாளாக்கினர் அந் நற்பெருங்கவிஞர்.

பிரமன் படைத்த அற்புதமான உலகைக் கண்டு இன்புற்றுத் துய்க்கும் இப் புத்துலகக் கவிஞர்க்கு, நாம்முன்னே குறிப்பிட்டது போல், பாட்டின் விந்தை பெருவிந்தையாகப் படுகின்றது :

"ஆனாலும் நின்றன் அதிசயங்கள் யாவினுமே
கானமுதம் படைத்த காட்சிமிக விந்தையடா!
காட்டு நெடுவானம் கடலெல்லாம் விந்தையெனில்
பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா!
பூதங்கள் ஒத்துப் புதுமைதரல் விந்தையெனில்
நாதங்கள் சேரும் நயத்தினுக்கு நேராமோ?
ஆசைதரும் கோடி அதிசயங்கள் கண்டதிலே
ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ?" *

என்று விரிவாகப் பாடுகின்றார்.

எல்லாம் பாட்டா?

தமிழ் மக்கள் வாழ்வெல்லாம் பாட்டே. குழந்தை பிறந்த சில திங்களுக்கெல்லாம் தாலாட்டுத் தொடங்கிவிடுகின்றது; அன்னையின் அன்பு குழைந்த ஆரமுதாகப் பிறக்கும் பாட்டு, மனிதனின் கடைசி மூச்சின் போதும் கையறுநிலை யாக—ஒப்பாரி என்ற நிலையில் உருவாகி விடுகின்றது. பாட்டிலே தொடங்கிப் பாட்டிலே முடியும் நிலையை இவ்வாறு காண்கின்றோம். தமிழகத்தில் இன்று படக்காட்சி நிலையிலும், நாளிதழ், திங்களிதழ் நிலைகளிலும் பாட்டுக்கள் ஆயிரக்கணக்கில் நாள்தோறும் உருவாகி வருகின்றன, எண்ணிக்கையில் நனிமிகுதியாக இவை உருவான போதும், தரத்திலும் பண்பிலும் விரல் விட்டு எண்ணத்தக்க அளவிலேயே 'பாட்டுக்கலை' தற்காலத்தில் வளர்ந்து வருகிறது என்பது பாட்டின் திறன் ஆய்ந்து தெளிந்த மூதறிஞர் முடிவு. *

1. பாரதியார் பாடல்கள்—விநாயகர் நான்மணிமாலை—பா. 25.
   * பாரதியார் பாடல்கள் — குயில்பாட்டு — 93-100 வரிகள்.
2. It is the authors, more than the diplomats, who make nations love one another."
   —How to teach a foreign Language—Otto Jesperson-P.179

சென்ற இதழின் தொடர்ச்சி :

அறிவன் கோயில்

வித்துவான் சி. கோவிந்தராசனார்,

தமிழ் விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

(உரிமை ஆசிரியருக்கு)

சமணர் குகைக்கோயில் :

இந்திய நாட்டு வரலாற்றுள், கி. பி. ஐந்து ஆறாம் நூற்றாண்டுகள் சிற்ப வோவியக் கலைஞருடைய கைத்திறனுக்கு இலச்சினையாக விளங்கியவை என்பர். இன்று ஐதராபாத் என்று சொல்லப்படுகின்ற மாநிலத்தில் அமைந்துள்ள அஜந்தா குகைக் கோயில்களும் மண்டபங்களும் அவைகளில் அமைக்கப்பட்டுள்ள கலைநிறைந்த சிற்பங்களும், வியப்பைத்தரும் அழியாத வண்ணங்களால் மிளிரும் ஓவியங்களும், காண்போர் கண்கட்கு விருந்தாய் அமைந்துள்ளன. அவைகளை உண்டாக்கிய புத்த பிட்சுக்கள் தங்கட்குப் பின் வரும் மக்களினம் கண்டு, வரலாற்று உண்மைகளை அறிவதற்கென்றே, பாதுகாப்பான சூழ்நிலையோடு கூடிய இடத்தைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

மூன்றாம் பிறைபோல் வளைந்து நெடிதாக அமைந்துள்ள மலையில் செங்குத்தாக உயர்ந்திருக்கும் பாறை முகத்தில், அருமையாக அமைக்கப்பட்டுள்ள குடைதளிகளிலேயே புதுமைச் சிற்பங்களும் சித்திரங்களும் பொலிவுடன் விளங்குகின்றன. இக்கலைகள் குப்த வாகடர் காலத்தைச் சேர்ந்தவை.

இங்குள்ள ஓவியங்களுள் நிறங்கள் இட்டு அழகு செய்யப் பெற்றவை வண்ண வோவியம் எனவும், வரிவடிவில் அமைந்துள்ளவை புனையா வோவியம் எனவும் பெயர்பெறும். இவைகளைப் பெரிதும் உண்டாக்கியவர் பௌத்த பிட்சுக்களே யாவர். உருவங்களெல்லாம் உயிர்ப்புடன் நிகழ்ச்சிக்கு ஏற்ற மெய்ப்பாடுகளை முகத்தோற்றத்திலும் கண்களின் பொலிவிலும் காட்டக் கூடிய சிறப்புடன் அமைந்துள்ளன. இவ்வாறு அமைந்ததற்குக் காரணம், புலனறிவைக் கொண்டு உள்ளுணர்வால் பௌத்த முனிவர்கள் எழுதியதேயாம்.

அஜந்தா குகைகள் அமைக்கப்பட்ட கருத்திலும், அதிலுள்ள கலைகளின் முறையிலும், பழமையின் திருப்பமாகத் திகழும் சின்னமெனச் சிற்றண்ணல் வாயில் மலையிலுள்ள சமணர் குகைக்கோயிலும் அமைக்கப்பட்டது. இங்குள்ள சிற்ப வோவியங்கள் தமிழகத்தில் திகழ்ந்த அழகுக் கலை

களின் மூலபண்டாரமாக அமைந்து, காலத்தையும் கலையையும் வரலாற்றுடன் கணித்துக் காட்டுகின்றன. எனவேதான் தமிழக அஜந்தா வென்று சிற்றண்ணல்வாயில் சமணர் குகைக்கோயில் சுட்டப்பட்டு வருகிறது.

இக்குடைதளி பல்லவர் கால முறையில் அமைக்கப்பட்டதாகும். இக்குகைக் கோயில் மலையமைப்பின் வடகோடியாக மேற்குப்புறம் கவிழ்ந்துள்ள திருப்பத்தில், சரியாக மேல் நோக்கி நிமிர்ந்து நிற்கும் பெரிய பாறை மீது குடையப்பட்டதாகும். அடிவாரத்திலிருந்து ஐம்பதடி உயரத்திற்கு மேல் அமைக்கப்பட்டுள்ள இக்குடைதளி, தெற்கு வடக்காக அமைக்கப்பட்டு மேற்கு முகவாயிலுடன் காட்சியளிக்கிறது. இக் குகைக்கோயிலுக்குத் தெற்குப் பகுதியில் மற்றொரு குகைக்கோயில் அமைக்க முயன்றுள்ளமையைப் பாறையில் எல்லையிட்டுப் பொறித்துள்ள சுவட்டால் நன்கு அறியலாகும்.

இக்குகைக் கோயிலை அடைய அடிவாரத்தினூடே தொடர்ந்துவரும் சாலையின் வட கோடிக்குச் செல்லுதல் வேண்டும். இங்கு இரண்டு ஆலமரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. சாலையின் முடிவாகிய இப்பகுதியினின்றும் சரிவாக உயர்ந்துள்ள மலை வழியே குகைக் கோயிலுக்குச் செல்லுவதாகும். இடைவழியில் சற்று செங்குத்தான இடங்களில் படிகள் வெட்டப் பட்டுள்ளன. இவ்வழியாகச்செல்லும் பொழுதே கண்களுக்குக் குடைதளி காட்சியளிக்கும்.

சமணர் குகைக் கோயிலின் தோற்றம்

இத்தளி இரண்டு பகுதிகளாக விளங்குகிறது. முதற்பகுதி இயற்கைப் பாறையில் குடைந்தெடுக்கப்பட்டுள்ள முகமண்டபமும் கருவறையும் கூடியதாகும். இரண்டாவது பகுதி இவற்றிற்கு முன்னருள்ள செயற்கை மண்டபமாகும்.

குகைக் கோயிலின் முகமண்டபம் பாறையில் நீண்ட சதுரமாக எல்லை கோலப்பட்டுக் குடைந்தமைத்ததாகும். இம் மண்டபத்தின் நீளம்—22—அடி, 10 அங்குலம். அகலம்—11–அடி. 6–அங்குலம். இடையே, பாறையில் குடைந்தெடுத்துத் தனித்து நிற்கும் தூண்கள் இரண்டாகும். ஒவ்வொன்றும், 6 அடி, 2–அங்குலம் உயரமாகவும், 2–அடி, 2–அங்குலம் சதுரமாகவும் மண்டபத்தைத் தாங்கும் பாங்கில் அமைக்கப் பட்டுள்ளன. இப்பகுதியை அர்த்த மண்டபம் என்றும் அழைப்பர். மண்டபத்தின் நடுவே வெளிப்புறமாக வாயிற் படிகள் வெட்டப்பட்டுள்ளன.

இம்மண்டபத்தின் நடுவே உட்புறமாகக் குடையப் பட்டுள்ள அறை, 10–அடி, 6–அங்குலம் சதுரமானது. இதற்குச் செல்லும் வாயில், 5–அடி, 7–அங்குலம் உயரமும், 2–அடி, 6–அங்குலம் அகலமும் கொண்டது. இப்பகுதியைக் கருவறை, அல்லது உண்ணாழிகை என்பர். இக்கருவறை, முகமண்டபத் தினின்றும் மூன்றடி உயரத்திற்கு மேல் அமைக்கப்பட்டு வாயிற்படிகளுடன் கூடியதாகும்.

இயற்கைப் பாறையில் குடையப்பட்டுள்ள மேற்கூறிய குடைதளிக்குக் காப்பாகப் பாண்டியன் அவநீபசேகரன் காலத்தில் முன்மண்டபமொன்று கட்டப்பட்ட தென்பதை முன்னர்க் கூறினேம். அம்மண்டபம் கால வியற்கையால் சிதைந்தது. அது அமைக்கப்பட்டிருந்த அடித்தளத்தின் மீது எஞ்சிய பகுதிகளைக் கொண்டு, இப்பொழுதுள்ள முன்மண்டபமும், அதைச் சுற்றிக் காப்புச்சுவரும், கம்பிக்கதவோடு கூடிய வாயிலும் அமைத்துள்ளனர். இவற்றைக் காணும் பொழுதே இக்காலக் கட்டிடக் கலையென்பது நன்கு விளங்கும்.

குகைக்கோயிலில் காணத்தக்கவை :

1. சமணச் சிற்பிகளின் ஒப்பற்ற திறனைக் காட்டும் குடைதளியின் அமைப்பு. (2) உருவச்சிலைகள். (3) தூண்களி லுள்ள ஓவிய உருவங்கள். (4) கருவறை, முகமண்டபம் ஆகிய வற்றின் கூரைப்பகுதிகளிலுள்ள ஓவியச் செறிவுகள். (5) கோட்டுருவில் குழைந்து நெகிழ்ந்தோடிக் கோயில் முழுவதும் அழகுடன் விளங்கும் கொடியோவியங்கள், என்பவைகளே அங்கு காணத்தக்கவைகளாகும்.

முகமண்டபச் சிற்பங்கள் :—

பாறையில் குடையப் பட்டுள்ள இக்கோயிலின் முற் பகுதியே முகமண்டபமாகும். சமணச் சிற்பிகள் சிற்றுளி கொண்டே பாறையைச் செதுக்கிக் குடைந்து இம்மண்டபத் தைத் தெற்கு வடக்காக உருவாக்கியுள்ளனர். இம்மண்டபத் தினைத்தாங்கி நிற்கும் பாங்கில் அமைக்கப்பட்டுள்ள தூண்கள் எட்டாயினும், முகவாயிலினிருபுறமும் தனித்து எழுந்து

நிற்கும் இரண்டு தூண்களைத் தவிர, மற்றறையவை இருபுறமும் சுவரோடு சார்ந்த நிலையில் புடைப்பாகவே அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு, காட்சிக்குவிருந்தாக விளங்கும் இம்மண்டபத்தின் தெற்குச் சுவரோடு அமைக்கப் பட்டுள்ள அருகுச் சட்ட பீட அமைப்போடு கூடிய மாடத்தில் ஐந்து தலைகளையுடைய பாம்பு குடை நிழற்றத் தவக் கோலத்தில் வீற்றிருக்கும் சிலை நோக்கத்தக்கது. நல்ல உடலமைப்புடன் நிமிர்ந்த நிலையில் அங்கைத் தலமுடன் பதுமாசன மிட்டு அமர்ந்துள்ள அழகிய இச்சிலை, சமண தீர்த்தங்கரர் இருபத்துநால்வருள் ஒருவராகிய பார்சுவ நாதர் படிமமாகும். இச்சிலை பெரும்புடைப்புச் சிற்ப மாகவே படைக்கப்பட்டுள்ளது.

பார்சுவநாதர் சிலைக்கு எதிராக, வடபாலுள்ள சுவரில் அமைக்கப் பட்டுள்ள ஒரே அளவுள்ள மாடத்தில் தவக்கோலத்தில் மற்றொரு சிலை உருவாக்கப்பட்டுள்ளது. மார்பிலே யோக பட்டை தவழ, முகத்தில் ஞானவொளி திகழ, வாழ்வின் உண்மையைக் கண்ட உவப்பு உதட்டிலே

பார்சுவநாதர்

திருவாசிரியன்

நிலவ, எழுச்சியோடு பேரின்ப நிலையில் வீற்றிருக்கும் இச்சிலை திருவாசிரியன் என்னும் சமண ஆசிரியரின் படிமமாகும்.

இவ்விரண்டு சமணப் பெரியார்களின் பெயர்களையும் நாம் திட்டமாக அறிந்து கொள்ள, அவரவர்க்கு முன்னர் நிற்கும் தூண்களின் அடிச்சதுரத்தில், பார்சுவநாதர், திருவாசிரியன் என்று வெட்டப்பட்டுள்ள பழமையான கல்லெழுத்துக்கள் உதவுகின்றன.

கருவறைச் சிற்பங்கள் :

ஏழடி உயரமே கொண்ட இவ்வறையின் நேர் சுவற்றில் மூன்று உருவங்கள் வெட்டப்பட்டுள்ளன. யோகநிலையில் அமைக்கப்பட்டுள்ள இவைகளில், இடப் புறத்திலும் நடுவிடத்திலும் முக்குடைகளின் கீழிருப்பவர் சமண தீர்த்தங்கரருள் இருவராவர். அடுத்து வலப்புறம் ஒரு குடைக்கீழ் இருப்பவர், ஒரு சமண் ஆச்சாரியன் அல்லது அருக சமயம் கொண்ட அரசன் என்பர். அறையின் மேல் விதானப் பாறையின் நடுவில் பற்றுக் கோடாக அமைக்கப்பட்டிருந்த பதுமபீடமும் குடையும் இப்பொழுது இல்லை. இருந்து சிதைந்தற்குரிய சின்னங்கள் அடிவாரத்தில் கிடைக்கின்றன. முகமண்டபத்திலும் கருவறையிலும் உள்ள ஐந்து சிற்ப வுருவங்களும் இயற்கைப் பாறையிலேயே செதுக்கப்பட்டுள்ளன.

ஐந்து வணக்கம் :

சமணத் துறவிகள் ஒவ்வொரு நாளும் ஐந்து சமணப் பெரியார்களை (பஞ்ச பரமேட்டிகள்) வணங்குதல் வேண்டும். அப் பெரியார்கள் அருகதேவர், சித்தர், ஆசிரியர், உபாத்தியாயர், சாதுக்கள் என்பவராவர். இவ்வைவரையும் முறையாக வணங்குதலே ஐந்து வணக்கம் (பஞ்ச நமஸ்காரம்) என்பர். இதற்குரிய மந்திரமும் அப்பெரியார்களைச் சுட்டும் பெயர்களின் முதல் எழுத்துக்களான் அமைந்ததாகும்.

இச் செய்தி "புலா லாகிய ஊன் உண்ணுதலை விலக்கி, பொய் கூறுமையாகிய விரதத்தோடு பொருந்தி, அழுக்காறு அவா முதலியவற்றைக் கைவிட்டு, பொருணூல்களை உணர்ந்து, ஐம்புலன்களும் அடங்கிய கொள்கையினை உடையராய், உண்மைத்திறனை அறிந்த சீரியோர் அமர்ந்த ஸ்ரீகோயிலில் (அருகர்கோயில்) பஞ்ச பரமேட்டிகள் நிலை பெற்ற ஐந்து சந்தியும் தம்முட் கூடி வந்து கலந்த சிறந்த பெரிய மன்றம்" என்று சிலப்பதிகாரம் நாடுகாண் காதையினுள் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இம் முறையிலேயே சித்தண்ணல் வாயில் சமணர் குகைக் கோயிலும் அமைந்திலங்குகிறது.

(தொடரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி :

தமிழ்ப் பண்பாடு

ச. பாலசுந்தரம்

10. பழந்தமிழர் பண்பாடாம் மாளிகைக்குள்
பரிந்தழைத்துச் செல்கின்றேன் ஆங்கு நீவிர்
எழுந்தொளிரும் சிற்பஎழில் மாடகூடம்
ஏழிசை நாடகம் பயிலும் எழில ரங்கு
தொழுந்தகைய பற்பலவும் காண்பீர் ! பாங்கே
தூண்கள் சிலபிளந்திருக்கும் சுவர்கள் கெட்டு
விழுந்திருக்கும் அச்சுவரின் வெடிப்புத் தோறும்
விளையாடும் தேள்கரப்பான் வண்டின் கூட்டம்

11. வழிநெடுகப் பெருநெருஞ்சி வளர்ந்து சிந்தை
வாட்டுகின்ற தாழ்நிலையும் காண்பீர் நீரை
விழிபெருக மாய்க்காமல் விளக்கங் காண்பீர்.
வீரமின்றி மானமின்றி, வாழ்ந்த வீட்டின்
அழிதகவு நோக்காமல் அயலார் வீட்டில்
ஆய்வின்றிக் குடிபுகுந் தங்கடிமை யானல்
பழவீடு பாழாகா தென்ன செய்யும்
பைந்தமிழ்நூற் கருவியொன்றே செம்மை செய்யும்.

12. பொங்கொளியிம் மாளிகைவிட் டகன்ற தாலே
பொலிவிழந்தே உருவழிந்த நிலையில் மேலும்
எங்குமிருள் நிறைந்தெலிகள் மகிழ்ந்து வாழும்
எச்சமிட்டு வௌவால்கள் திரியும், தீமை
பொங்குகிற திருடர்மறை விடமாய்ப், புன்மை
புரிகின்ற கயவர்களின் அவையாய், அச்சம்
தங்கிநிற்கும் நிலைதவிர்க்க வேண்டா மோகம்
தமிழ்ப்பண்பா டிந்நிலையை எய்தலாமோ ?

13. முக்கடல்முந் நாடுவிறல் வேந்து மூன்று
முப்பொருள்முக் கனிதமிழ்மூன் றென்று நோக்கித்
தக்கமுறை யமைத்துயர்ந்த தமிழர் வாழ்வில்
தலைசிறந்த பண்புபல உளவென் றுலும்

மிக்கபுகழ் முச்சங்க நூல் களான
வியப்புடைய தமிழ்க்கடலில் வேட்கையாலே
புக்கெழுந்து சிலமுத்தம் எடுத்தளிப்பேன்
புலனுளும் நலமுடையீர் போற்றிக் காண்மின்!

14. தீவளிவான் நீர்நிலத்தின் மயக்கமாகத்
திகழ்உலகில் இருதிணையும் செழித்த என்பார்
மேவுமவை தத்தமக்குள் வேறுபாடும்
மிகப்பலவாம்; ஒற்றுமையும் விளங்கல் கண்டோம்
காவிரிகோ தாவரிநீர் கங்கை நீத்தம்
கருதின்நீர் ஒன்(று) ஆனல் தன்மை வேறும்
மாவிலங்கு பறவைமரஞ் செடிகள் யாவும்
வளர்நிலத்தால் சூழ்நிலையால் மாறுகொள்ளும்

15. உண்மையினை உடல்நூலோ டுயிர்நூல் வல்லார்
ஒப்பும்வகை உரைத்துள்ளார் உலகில் மக்கள்
கண்முதலாம் உறுப்பொப்பார் இன்பதுன்பக்
கருத்தொப்பார் கருதும்உடற் பசியும்ஒப்பார்
மண்முறையால் இடந்தோறும் வாய்த்துநிற்கும்
வாழ்முறையால் உளப்பாங்கால் மொழியால் நோக்கால்
ஒண்மைதரும் ஒப்புரவால் ஒழுக்கந் தன்னல்
ஒவ்வாரென் றறியநில உலகே சான்றும்.

16. அடிப்படையில் அமைந்தகுணச் செயல்கள்தம்மை
அறிஞரெலாம் பண்பாடென் றறைகின்றார்கள்
குடிப்பிறப்பால் சூழ்நிலையால் இனங்கள் தோறும்
குருதியொடு கலந்தொளிரும் பிறர்பண் பாட்டை
நடிப்பதனல் நாத்தழும்பப் பேசும் பேச்சால்
நயந்தொருவர் கொள்வதெனல் நரிக்கோம் பேயாம்
படிப்பதனல் மட்டும்உயர் வொழுக்கம் நோக்கம்
படியுமென்பார் பிழையுரைபோல் இதுவு மொன்றும்.

17. நிறத்தாலும் வடிவாலும் பிரிவர் சில்லோர்
நிகரில்லாப் பண்பதனல் பிரிவர் பல்லோர்
அறத்தாற்றிற் பிரிப்பதெனிற் பின்புசொன்ன
அளவையிலே இனம்பிரிப்ப தறிஞர் கொள்கை

புறத்தோரும் கண்டேத்தும் சிலபண் பேனும்
பூண்டஇனம் பொலிய மற்ற இனங்கள் தேயும்.
மறுத்தோதற் கியலாநன் மாண்பு கொண்ட
மறத்தமிழர் பண்பாட்டின் திறத்தைக் காணின்.

18\. தேனடையிற் றீஞ்சுவையும் கடலில் உப்பும்
செந்தணலில் வெம்மையையும் தேடிப்பார்ப்பார்
மானிடரில் எவருமிலர்-மருக்கொ ழுந்தில்
மணம்தேடி நின்றயரும் மக்கள் உண்டோ?
வானெழுந்த கதிர்காட்டப் பிறரா வேண்டும்?
வண்டமிழர் பண்பாடும் அவ்வா றேனும்
யானறிந்த சிலமொழிவேன் "யாதும் ஊரே
யாவருமே கேளிர்" எனும் தமிழகத்தில்

19\. மஞ்சொடுங்கும் மாமலையில் அருவிகால
மணிவரன்றிப் பொன்கொழிக்கும் பொன்னி நீடக்
கஞ்சமுகம் பூத்துமுதிர் செந்நெல் கூரக்
கடிமுல்லை முறுவலிப்ப கடலில் முத்தம்
நெஞ்சுவப்ப விஞ்சுதலால் நிலைத்த பண்பு
நிறைந்ததிலே வியப்பில்லை; நீள்நிலத்தில்
தஞ்சமெனின் தமிழ்நாடு தாயாய்ப் பேணும்
தகவினைமுன் பெற்றிருக்கத் தடையேயில்லை.

பண்புடை யார்ப்பட் டுண்டிவ் வுலகமிங் கதுவின் றாயின்
மண்புகுந் தொழியும் என்ற வள்ளுவர் வாய்மைக் கூற்றை,
நண்பொடு நயந்து வாழ்ந்த நறுந்தமிழ் மக்கட் பண்பின்
ஒண்மையை வெளிநாட் டாரும் உளமுவந் துரைப்பக் கண்டோம். 20

இன்பெழுந் தாக்கஞ் சேர்க்கும், எப்பொருள் வரினும் தீமை
பின்பெழும் செயலைச் செய்யார் பிறப்பிலி னிழிவு காணார்
என்பெழுந் துலறி யாக்கை இறப்பினும் அறத்தா றின்றி
அன்பொழிந் தளிக்கும் செல்வம் அருங்கலை வாணர் கொள்ளார். 21

தேர்பரி யானை சிற்றூர் செழும்பொருள் உடையூண் தந்து
சீர்மிகு புலவோர்ப் பேணிச் சிறந்தனர் மன்னர்; செல்வ
வேர்வறத் திட்டபோதும் வியனுடம் புயிரும் நல்கி
நேர்வரும் கலைஞர்க் கெல்லாம் நிறைபரி சளித்துவாழ்ந்தார். 22

மலைபுரையானைக் கூட்டம் மறிக்கினும் மடியா நெஞ்சும்
கொலைவடி வேல்முகத்திற் கூடினும் இமையாக் கண்ணும்
அலைகடற் படைக்கும் அஞ்சா ஆண்மையும் உடைய வீரர்
தலைவிலை எனினும் ஈந்து தமிழகப் பெருமை காத்தார். 23

வேல்வரி வில்வாள் ஏந்தி வீரமே கருத்தில் தாங்கும்
மால்வரைத் தோளினாரும்; பால்மொழி மயிலின் சாயல்
சேல்விழி கொவ்வைச் செவ்வாய்ச் செழுமதி முகத்தினாரும்
சால்புறக் கலந்து வாழும் தனித்தமிழ் மாண்பு நோக்கின் 24

அன்றிலும் புறவும் போல அகநிறை அன்பால், பண்பின்
ஒன்றிய காதல் மேவி ஒருவனுக் கொருத்தி யாக
நின்றமை காண்போம்—அன்னார் நிழலுமவ் வடிவு மாகி
வன்றிறல் மக்கட் பெற்று வளமுற வாழ்ந்த நோக்கம் 25

துறந்தவர் துறக்கப் பட்டார் தொல்லறங் காக்க நின்றார்
சிறந்தவர்க் குதவி யாதல் செல்விருந் தோம்பித் தம்மை
மறந்தறம் செய்தல் வாழ்வில் மானமும் புகழும் வாய்ப்பின்
உறுந்தடைக் கஞ்சா துற்ற உயிர்தரல்; சுருங்கக் கூறின் 26

கொடை விருந்தோம்பல் ஆண்மை, குறைவறு கற்பின் பொற்பு
நடைநடு நிலைமை யார்க்கும் நலம்விளை சமயக் கொள்கை
படைமறம் மானம் சீர்த்த பழந்தமிழ்ப் பண்பாம்; ஆங்கே
தடைசெயும் மாசு போக்கித் 'தமிழினம்வாழ' வேண்டின் 27

நொந்தவர்க்கன்றி, மாறாய் நுழைந்தவர் எவரானாலும்
வந்தநல் விருந்தாய்ப் பேணும் வழக்கினை மாற்றல் வேண்டும்
செந்தமிழ் வளத்திற் கன்றிச் செழும் பொருள் சோம்பற் கீயும்
முந்திய வழக்கை மாற்றி முயல்பவர்க் குதவல் வேண்டும். 28

அருளடிப் படையில் மக்கட் காக்கமும் உணர்வும் நல்கி
வெருவுறும் இருளைப் போக்கி மெய்யுணர் வளித்த லின்றிப்
பொருளறு வழக்கும் புன்மை புகுத்திடும் சடங்கும் தாங்கும்
மருளுறு சமயப் போக்கை மாற்றிநன் கமைத்தல் வேண்டும் 29

மேயநற் றொழிலால் முன்னர் விளங்கிய வகுப்பின் உண்மை
போயபின் இருக்கும்சாதிப் பொய்ம்மையைக் களைதல் வேண்டும்
தாயினை இகழ்வார்ப் போலத் தமிழ்பழித் திருப்பார் தன்மைப்
பேயெனக் கடிதல் வேண்டும் பெண்மையை மதித்தல் வேண்டும் 30

கண்ணிரண்(டு) ஆயின் ஒன்றே காணுமவ் வாறே நாளும்
தண்ணளி தாங்கித் தாய்மைத் தகவுற இணைந்து நிற்கும்
பெண்ணினம் அடிமை என்னும் பேதைமை ஒழிய வேண்டும்
மண்வள மின்றேல் ஆங்கு வளர்பயிர்க் கெழுச்சியுண்டோ? -31

நறுந்தமிழ்ப் பண்புபேணி நாகரி கத்தைக் காக்கும்
திறந்தெரி அரசைப் போற்றிச் செறிபகை தவிர்க்க வேண்டும்
அறந்தழைத் தாக்கம் நல்கும் அடிப் படைக்கல்வி நாட்டிற்
சிறந்திட உழைத்துச் சிந்தை செழிப்புறச் செய்து, நம்பால் 32

வற்றிய ஒழுக்கம் ஆண்மை வாழ்நடு நிலைமை மீண்டும்
முற்றநல் லறிவினோடு முயலுதல் வேண்டும்; ஈண்டுக்
கற்றவர் தமிழ்ப்பண் பாட்டைக் கடற்புவி உணரும் வண்ணம்
தெற்றென ஒழுகிக் காட்டிச் சீர்த்தியை மீட்டல் வேண்டும் 33

உழைப்பினை வெறுத்தல் மிக்க உடைமையை விரும்பல், நாட்டின்
செழிப்பினைக் குறைக்கும், மாறும் செல்வமே குறியாய்ச் சான்றோர்
பழிப்பன புரியின் தென்னர் பண்பினை அழிக்கும், இற்றால்
விழிப்புடன் தொண்டு செய்யின் வெற்றிநம் பண்பாட்டிற்கே. 34

வான்றமிழ்ப் பண்பா டிங்கே வறந்ததன் மூலம் ஓர்ந்தார்
கோன்முறை யாற்றம் வேற்றார் கூட்டம் நம் மடமை என்பார்
யான்தெரிந் துரைப்ப தெல்லாம் நானிலம் புகழும் நம்மின்
தேன்மொழி மறப்பும் மாற்றுத் திசைமொழிப் பற்று மேயாம். 35

உறுபொருள் உறவுமாந்தர் உடலுறுப் பெவைக்கும் மேலாய்ப்
பிறவழி வாராதீங்குப் பிறப்பொடு வளர்ந்து சிந்தை
நெறியுறக் கலந்து நெஞ்சில் நேயமுற் றழியா தாகி
நிறைபொருள் மொழியே இந்தநினைப் பினைமறக்கின் உய்யோம் 36

மொழியும் அம்மொழியால் உற்ற முத்தமிழ் நூலும் இன்றேல்
வழிவழிப் பெருமைகூறும் வாய்ப்பொடு வளனும் இல்லை
கழிபெருங் காதல் மேவிக் கலப்பிலா மொழிப்பண் பாட்டை
விழியெனப் பேணின் வாழ்வில் வெற்றி பெற்றுயர்தல் திண்ணம் 37

செந்தமிழ்ப் பண்பா டென்ற சீர்மிகு தலைப்பின் கீழே
வந்துசில் கவிதை கூறவாய்ப்பளித் துயர்த்தோ ருக்கும்
சிந்தையிற் பொறுமையோடு செவிமடுத் தமைசான் றோர்க்கும்
இந்தநல் லவைக்கும் உள்ளார்ந் தெழுந்தநல் வணக்கம்; நன்றி. 38

நாலடி காட்டும் நல்வழி:

வாழ்க்கையின் குறிக்கோள்!

வித்துவான். ந. சேகதீசன்
ம. க. உ. பள்ளி, ஈரோடு.

(திருச்சி வானொலி நிலையத்தின் இசைவு பெற்று வெளியிடப் பெறுகின்றது)

கால வெள்ளத்தைக் கடந்து வரும் கருத்துப் படகுகள் தாம் இலக்கியங்கள். இப்படகுகள் தலைமுறை தோறும் தவறாது வந்து உயர்ந்த கருத்துக்களால் மக்கள் வாழ்விற்கு உதவி செய்கின்றன. சில படகுகளில் கவிதைகளின் தொகுப்புக்கள் வரும். சில படகுகளில் காவியங்கள் வரும்! இன்னுஞ் சில படகுகளிலே அற நெறிகள் வரும்! இப்படிப் பற்பல!

தமிழில் இத்தகைய இலக்கியப் படகுகள் எண்ணிறந்தன உண்டு! அவை சுழலையும் சூறாவளியையும் வென்று தமிழர்க்குத் தலைமுறை தோறும் வந்து தக்க துணை செய்கின்றன. இவற்றுள் பற்பல சமணத் துறவியரின் கருத்துச் செல்வங்களை நமக்குத் தருவது 'நாலடியார்' என்னும் நல்லறப்படகாம். இப்படகினை நம் பால், அன்பால், உய்த்தவர் பதுமனார் என்னும் புலவர் என்பர். இப்படகு புறப்பட்டுப் பன்னூறு ஆண்டுகள் ஆகின்றன. இந் நாலடியார் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் முதல் வதாக வைத்து எண்ணப் படுகின்றது. அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருள் பற்றிய பல கருத்துக்களை எளிய முறையில், ஏற்ற உவமைகள் பல இடங்களில் அமைய, அழகுற எடுத்துரைக்கின்றது. "பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரணடில்" எனவும் "நாலு மிரண்டும் சொல்லுக்குறுதி" எனவும் வருகின்ற தொடர்கள் இந்நூலைத் திருக்குறளோடு ஒப்ப வைத்து உயர்வு தருகின்றன!

இனி, இந்நூல் மக்கள் நல்வாழ்வு வாழ எங்ஙனம் வழி காட்டுகின்றது என்று பார்ப்போம். மனிதனுக்குத்தான், தான் பெற்றுள்ள வாழ்வின் சிறப்பை அறிந்து அதனைப் பயன் படுத்தி உயரும் அறிவும் ஆற்றலும் உண்டு. மற்றைய உயரினங்களுக்கு இம் மாண்பு இல்லை. ஆகையால்தான் அவை மனிதனை விடப் பல படிகள் தாழ்ந்து அடிநிற்கின்றன. பசிக்கு உணவு தேடுதல், பகை யொழித்தல், இனம் பெருக்குதல் ஆகியன எல்லா உயிரினங்கள் மாட்டும் காணப்படும் பொதுப் பண்புகளாம். எனவே, இவை மனித வாழ்வின் குறிக்கோள்களாக மாட்டா! சில பல அறநெறிகளை வகுத்துக் கொண்டு (வகுத்துக் கொண்ட) அந்நெறியிலிருந்து வழுவாமல், பிறழாமல், வாழ்

வதே மனிதனுக்கு உரிய வாழ்வு. வாழ்க்கை நெருக்கடியால் வறுமையால், வாய்ந்த சூழ் நிலையால் இந்நெறிகளின் வழியே வாழ இயலாமற் போயின் அந்நெறிகளை நீக்கிவிட்டு வாழாமல், அந்நெறிகளை வாழவைத்துத்தான் மாய்வதே மதித்தற்குரிய மனித வாழ்க்கையாம்.

வாழ்வின் குறிக்கோள் இன்பம் என்று பலர் சொல்லுவர். அவ்வாறாயின் எது இன்பம் என்றும், அதனை எய்தும் வழிகள் எவையென்றும் நாம் ஆராய்தல் வேண்டும். புலன்கள் யாவும் நல்ல வலிவுடனும் பொலிவுடனும் இருக்குங்கால் நன்மையை நாடிச் செயலாற்ற வேண்டும். ஆற்றுஞ் செயலால் நெஞ்சில் நிறையும் உவகை யுணர்வே இன்பம்! ஆயினும் அவ்வின்பமும் அறிவுக்குப் பொருந்தியதாக இருக்க வேண்டும். இன்பம் இன்ப மாவதற்கு அடிப்படை அதன்பால் அமைந்திருக்கும் நன்மைக் கூறுபாடேயாம். அதனால்தான் குறிக்கோள் இடையூறுகளுக் கிடையேயும் இன்பந்தர வல்லதாக இருக்கின்றது!

வாழ்வின் குறிக்கோளாகிய நன்மை தரும் இன்பத்தை நாலடியாரின் வழி நின்று பார்ப்போம்!

அறிவ(து) அறிந்(து) அடங்கி அஞ்சுவ(து) அஞ்சி
உறுவ(து) உலகுவப்பச் செய்து—பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல் புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது!

இந் நாலடிப் பாடல் துன்புற்று வாழாத குறிக்கோள் மனிதன் இயல்பை இயம்புகின்றது! முதலில், நாம் அறிய வேண்டுவன வற்றை அறிதல் வேண்டும். அறியத்தாகதன வற்றை அறிந்து கொள்வதனால் பேரிழுக்கும் பேரிடருமே விளையும். 'அறிவறிந்த மக்கட்பேற்றினையே' வள்ளுவனாரும் போற்றுகின்றார். 'அறிவறிந்த மக்கள்' என்னுந் தொடருக்கு உரையெழுதிய பரிமேலழகரும், "அறிய வேண்டுவன அறிதற் குரிய மக்கள்" என விளக்கந் தந்தார்! இத்தகைய அறிவு பெருகக் கற்கத் தருவனவற்றை ஒருவன் கற்றல் வேண்டும்!

'கற்பவை கசடறக் கற்க'

என்று வள்ளுவர் வழி காட்டியுள்ளார். அவர் நூல் வழி நின்ற நாலடியார் 'ஆராய்ந்து அமைவுடைய கற்பவே' என நுவலுகின்றது. அடுத்து, இத்தகைய கல்வியறிவின் பயனாக அடங்கி நிற்றல் வேண்டும்! தீயனவற்றை எண்ணாத வண்ணம் உள்ளத்தை அடக்க வேண்டியும், தீயனவற்றைச் சொல்லாத வாறு நாவையடக்குதல் வேண்டும். தீயனவற்றைச் செய்யாத வண்ணம் உடலை யடக்குதல் வேண்டும். இவ்வாறு உள்ளம், உரை, உடல் ஆகியன தீ நெறிக் கண்ணே படரா வண்ணம் தடுக்கத் தகை சான்ற நல்லறிவு முதற்கண்ணே வேண்டும்

அதனாற்றான், 'அறிவதறிந்து' என அறிவிற்கு முதலிடந்தந்து மொழிந்தார். "சென்ற விடத்தாற் செலவிடாது தீதொரீஇ நன்றின்பா லுாய்ப்பது அறிவு" என்று வள்ளுவர் 'தன்னை யாளத் துணை செய்யும் அறிவையே அறிவென்று கூறினர். 'கற்றவர் கண்ட தடக்கம்' என்று புறத்திட்டும் புகலு கின்றது.

இனி, குறிக்கோளாகிய இன்பத்தின் வாயிலுக்கு இட்டுச் செல்லும் அடுத்தபடி அஞ்சுவது அஞ்சும் பண்பாடாகும்! பழி யொடுமிடைந்த இழி செயல்களைச் செய்ய அஞ்சுதல் கோழைத் தனமென்று கூறத்ததுந்ததன்று! அதுவும் ஆண்மைதான்! தன்னலங்கருதி, மனச் சான்று கொன்று தாழ்வுடைய செயல் புரிந்து வாழ்தல் எவ்வாற்றானும் ஆண்மை நிறைந்த வாழ்க்கை யாக மாட்டாது. பொய்பேச, புறங்கூற, பிறர் மனை விரும்ப, அறங் கொல்ல, அண்டை அயலாரை வஞ்சிக்க, நடு நிலை துறக்க, நன் மானம் இழக்க அஞ்சுபவன் நன்னெஞ்சு படைத்த நயத்தகு நாகரிக மனிதனாவான்! "அஞ்சுவதஞ்சிப் புகழெனில் உயிருங் கொடுக்குவர்' என்னும் புற நானூற்றுத் தொடரும், 'அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்' என்று குறள் கொடுக்கும் குரலும் நம் செவியேறி, நெஞ்சேறி நம்மைச் செம் மைப் படுத்துவன.

இதுகாறும் நாம் நோக்கிய நல்லறிவு; நல்லடக்கம், நல்லச்சம் என்னும் இவை உளத்திருத்தத்திற்கு உறுதுணை யாக நிற்பன. இவற்றின் துணைக்கொண்டு செயலாற்றலே முடிவாகிய பயனுக்கு அடிகோலுவதாம். "உறுவதுலகுவப்பச் செய்து' என்னுந்தொடர் எண்ணங்களின், மன இயல்புகளின் விளைவாகிய செயலறத்தையே எடுத்துரைக்கின்றது. செய்யத் தகுந்தனவாகிய செவ்விய செயல்களை உலகுவாழ் உயர்ந் தோர் உவக்குமாறு செய்வதால் உயிருக்கு ஊதியமாகிய புகழ் கிடைக்கின்றது. கிடைக்கின்ற புகழால் தளிர்க்கின்ற இன்பமே இன்பம். அவ்வின்பம் எய்தியோர் 'இன்பமே துன்பமில்லை எந்நாளும்' என்று செம்மாந்திருப்பர்.! இதனைத் தான், 'உறுவதுலகுவப்பச் செய்து பெறுவதனால் இன்புற்று வாழும் இயல் புடையார் எஞ் ஞான்றும் துன்புற்று வாழ்தல் இலர் என்றும் நாலடித் தொடர்கள் எடுத்துறைக்கின்றன. இங்கே உலகம் மகிழச் செய்யும் செயலால் பெறுவது புகழாகிய பயன் என்று நாம் உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும்!

வாழ்வின் குறிக்கோள் இன்பம்—அதனைத்தர வல்லது புகழ்! புகழை விளைப்பது குற்றமற்ற நற்செயல்கள் - அந்நற் செயல்களாற்ற உளத்தைச் செப்பனிடுவன அறிவதறியும் அறிவு, ஆக்கந்தரும் அடக்கம், அஞ்சுவது அஞ்சும் பண்பு என இன்பம் பயப்ப எடுத்தோதும் அழகே அழகு!

நாலடியாரில் அமைந்துள்ள இப்பாடல் ஒன்றிலேயே வாழ்வின் குறிக்கோள் தெளிவுற விளக்கப்படுமாற்றை எண்ணுந்தோறும் வியப்பு மிதூர்கின்றது.

இனிச் செய்யத்தகுவன எவை என்று நாம் சிந்திப்போம். மானிடப்பிறவி மாண்புடைப் பிறவி. அதனைப் பெற்றவர் பேரறப்பயனை அடைய வேண்டும். பழு மரம் தேடும் பறவை யைப்போல அறச்செயல் நோக்கி நம் நெஞ்சப்பறவை கால வானில் நீந்த வேண்டும். அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற் பெரும் பயனும் ஆற்றவே கொள்க!" என அறி வுறுத்தி அன்புடன் நம்மை அறப்பயனையாற்ற அழைக்கின்றது நாலடியார்.

எது அறங்களுள்ளே சிறந்த அறம்? இல்லை என வந் தார்க்கு இல்லையென்றுரையாத ஈர இதயத்தோடு வாரி வழங் கும் ஈகைப் பண்புதான் நல்லறம்—பேரறம்! தன்னிலும் தாழ்ந் தோன் இன்னலைப் போக்க முன்வந்து உதவும் முதிர் நலப் பண்பே ஈகை! ஏனெனில் 'ஈ' என்று கேட்டல் இழிந்தோன் இயல்பாகும். 'தா' என்று கூறல் தன்னை ஒப்பவன் இயல்பு— 'கொடு' வென்று கேட்டலோ தன்னைவிட உயர்ந்தோன் தன்மை! உலகில் தன்னைவிட உயர்ந்தவனுக்கு உதவுவதால் தருக்கித் திரியும் பண்பு தலையெடுக்கும். ஒத்தவனுக்கு உதவு வதால் திரும்பப் பெறும் எண்ணமும் ஆவலும் எழும். ஆயின் தன்னைவிட வறியவனை இருப்பவனுக்கு உதவுவதால் உண்மை உவகை உளத்தில் உருவாகும். அதுமட்டுமன்று; உயரிய புகழ் நிலையும் அரும்பும். எனவேதான், அறங்களுள் ஈகை முதலிடம் பெறுகின்றது.

அள்ளியள்ளிக் கொடுக்கக் கொள்ளை கொள்ளையாகப் பொருளில்லையா? கவலை வேண்டாம். ஈட்டிய பொருளாக வீட்டில் உள்ளவற்றுள் இம்மி யரிசித்துணையேனும் கொடுத் துண்ணுங்கள், அதுவும் நல்ல ஈகைதான் என நம்மை நாலடி யார் ஊக்கப்படுத்துகின்றது. நிறைந்த பொருளைப் பெற்றி ருக்கும்போது அதனைமேலும் நிரப்ப நேரத்தையும் நினைவையும் செலவிட வேண்டாம்! மறைக்காமல் மறுக்காமல் பகுத்துக் கொடுங்கள். பலருக்குக் கொடுங்கள். "எமக்கே இவை வேண்டும் என்றெண்ணி, இரந்து வருவோரிடம் 'இல்லை' யென்று கூறவேண்டாம்" என்று செல்வம் பெற்றுச் செழித்த மக்களுக்கு அறிவுரையும் தருகின்றது அருமை நாலடியார். 'செல்வத்துப் பயனே ஈதல்' என நக்கீரனாரும் வரையறுக் கின்றார்!

கொடுத்து வாழ்வோரை அடுத்து வாழ்வோர் பலர்! எது போல வென்னில்—ஊர்நடுவே மேடை சூழ்ந்த பழந்தரு பனை

பசை சூழும் மக்களைப்போல! நடுவூர்ப் பனையைத் தேடி நெடுந் தூரம்செல்லவேண்டியதில்லை. எளிதிலே எவரும் எய்தலாம். மேடை சூழ்ந்த பனையெனில், பறித்த பழத்தை இருந்துண்ண இடமும் தரும். வாடிய மக்கள் நாடியடையும் வள்ளல்களும் இத்தகையவரே. அவர் வறியரால் எளிதிலே எய்தப்படுப வராக இருத்தல் வேண்டும். பழங்கொடுத்த பனை இடங் கொடுப்பதைப்போல, வாடிவந்தவர் வருத்தந் தீரப் பொருள் தருவதோடு இடந்தந்து இன்பந்தந்து அணைப்பும் ஆதரவுந் தரவேண்டும்.

இந்நடுவூர்ப் பனையைப் பாராட்டுவோம். இதன் நல்லி யல்பு கொண்ட அன்பு நெஞ்சர்களையும் அகமகிழ்ந்து பாராட்டு வோம். இதோ! இன்னொருபனை காய்க்காத ஆண்பனை இருப்ப தோ பிணங்களையிடுகின்ற இடுகாடு! மரமும் பயனற்றது! இருக்கும் இடமும் அச்சந்தருவது! ஆம்! இவர்களை ஒத்தவர் களும் உலகில் இல்லாமலா போய்விட்டனர்? நெருங்குதற்கும் நெருப்பைப் போன்றவர்களும்—ஈகைப் பண்பும் இல்லாத வர்கள் இவர்கள் யாவர்? மற்றவர்க்கும் மனம் நெகிழ்ந்து தாராது, தானும் உண்ணாது அவமே வாழும் கடுகு நெஞ்சினர்! செல்வத்தின்பால் பற்றுள்ளம் படைத்தவர்! மக்கள்பால் மன விரக்கம் அற்றவர்! இவர்க்குப் பொருத்தமான பெயர் 'காய்க் காத சுடுகாட்டுப்பனை' என்பதுதான்! இவ்வாறு. ஈவோர் சிறப்பைச் சொல்லி, ஈயாதோர் இழிவைச் சொல்லிக் கொடுப் போரைப் பாராட்டி கொடுக்க மனமில்லாதவரை இடித்துக் காட்டுகின்றது நாலடிப் பாடல். பாடலைப் பாருங்கள்!

> நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க
> படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்
> குடிகொழுத்தக் கண்ணும் கொடுத்துண்ணா மாக்கள்
> இடுகாட்டுள் ஏற்றைப் பனை !

வாழ்வின் குறிக்கோளை அடைய ஈகை உற்றவழியென் றாலும் ஈதற்குரிய பொருள் திரட்டும் முயற்சியும் வேண்டு மன்றோ! அகத்தில் அருள் உடையராய் இருத்தலால் மட்டும் என்ன பயன் உண்டாகும்! அருள் செயல் உருப்பெறப் பொருள் வேண்டும். அருள் இல்லாத பொருள் குருடு! பொருள் இல்லாத அருளோ முடம்! ஆகவேதான், செல்வந் திரட்டச் செயலாற்றுமாறு நாலடியார் நவிலுகின்றது! வாழ் வின் உறுதிப் பொருள்கள் மூன்று. அவை அறம், பொருள், இன்பம், என்பன. இம்மூன்றனுள் நடுவில் இருப்பது பொருள். இதனைப் பெற்றால் இருபுறம் அமைந்த அறமும் இன்பமும் அடையலாம். நடுவில் அமைந்த பொருள் இன்றேல் இவை யிரண்டும் அடைதற்கு இயலாதனவாகிவிடும். அறமும் இன் பமும் இல்லாத வாழ்க்கை பண்பும் பயனுமற்றுவிடும்! ஏக்கமும் இன்னலும் மிக்கதாகிவிடும். (தொடரும்)